விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 244 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 04 புதன்கிழமை (20.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

பொதிகள் சேவை
Parcel.lk GTV Express
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
இங்கிலாந்து - Rs.1400/= அவுஸ்திரேலியா - Rs.1700/=
ஜெர்மனி - Rs.1900/= சுவிஸ் - Rs.2550/=
பிரான்ஸ் - Rs.2000/= இத்தாலி - Rs.2250/=
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Enterprises (Pvt) Ltd (1335) 011 4 654 444

## அருண ஜயசேகரவை பாதுகாக்க அநுர அரசு கடும் பிரயத்தனம்



### சாடுகிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில் சம்பவம் இடம்பெற்ற வேளை கிழக்கு மாகாணத்தின் முன்னாள் கட்டளைத் தளபதியாக பதவி வகித்த பாதுகாப்புப்

02ஆம் பக்கம் பார்க்க

**முத்தையன்கட்டுச் சம்பவம்**

## மேலும் ஒரு சிப்பாய் கைது நால்வருக்கும் மறியல் நீடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமுத்தையன்கட்டுக் குளத்திலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினரின் விளக்கமறியல் காலம் நேற்று மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சம்பவ தினத்தன்று மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் நேற்று முன்தினம் மேலுமொரு இராணுவச் சிப்பாய் கைது செய்யப்

03ஆம் பக்கம் பார்க்க

### நல்லூர்க் கந்தனுக்கு
## இன்று சப்பறம் நாளை தேர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தில் 23ஆம் திருவிழாவான இன்றுபுதன்கிழமை சப்பறத் திருவிழா இடம்பெறவுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

**விசாரணை அதிகாரிகளை அனுமதியுங்கள்**

# ஜனாதிபதி அநுர அரசிலும் 'நல்லிணக்கம்' பேச்சளவில்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் அதிரடிப் பாய்ச்சல்




(கொழும்பு)

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டது முதல் 'நல்லிணக்கம்' தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க பலமுறை பேசியிருந்தார். ஆனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைத் தம்வசம் வைத்திருக்கும் அவரது அரசாங்கம் யுத்த காலப் பகுதியில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிக்காட்டும் வகையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை.

(03ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் துப்பாக்கி ரவைகள்



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நீர்க் குழாய்களை நிலத்தில் புதைக்கும் பணிகளுக்காக நிலத்தினை அகழ்ந்தபோது ஒரு தொகை

15ஆம் பக்கம் பார்க்க



## நீதிமன்றக் கட்டமைப்பை அரசியல் மயப்படுத்த அரசு முயற்சி

### நாமல் எம்.பி காட்டம்

(கொழும்பு)

நீதிமன்ற கட்டமைப்பை அரசியல் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட வேண்டும். அரசியல் தலையீடு இருத்தல் கூடாது. நீதித்துறையை அரசியல் மயப்படுத்தினால் பாரிய விளைவுகள் ஏற்படும்

15ஆம் பக்கம் பார்க்க

## ஊழலை ஒழிக்க வந்த அரசின் முக்கிய அமைச்சரே ஊழல்வாதி

### அநுர அரசின் போக்கை சாடுகிறது எதிரணி



(கொழும்பு)

ஊழல் மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுள்ள யாருக்கும் தமது ஆட்சியில் பதவி வழங்கப்படமாட்டாது எனத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த

15ஆம் பக்கம் பார்க்க

## பரந்தன் விபத்தில் இளம் பெண் மரணம்

### போதையில் சாரதி மன்றில் அறிக்கை





(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனத்தின் சாரதி விபத்தின் போது போதைப்பொருள் பாவனைக்கு உட்பட்டிருந்தார் என மருத்துவ அறிக்கை மூலம் உறுதியாகியதுடன் டிப்பர் வாகனத்தின் உரிமையாளரையும் மன்றில் ஆஜர்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட

03ஆம் பக்கம் பார்க்க

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டத்தை நடத்தியவர்கள் நாமே

### ஊடகச் சந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தின் நாயகர்களே நாங்கள்தான் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடை

16ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று (20) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

நாடு முழுமையிலும் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்று 20ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்வது என்ற, பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மேற்படி அடையாள வேலைநிறுத்தம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

சம்பள முரண்பாடு, ஆட்சேர்ப்பு, வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை ஆகிய காரணங்களை முன் வைத்து இவ் அடையாள வேலை நிறுத்தம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அருண...

பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவை மாத்திரம் பாதுகாக்க அரசாங்கம் முயற்சிப்பது எவ்விதத்தில் நியாயமாகும். இராணுவத்தின் மீது பற்று இருக்குமாயின், அருண ஜய சேகர பதவி விலக வேண்டும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. அமைச்சரவை அமைச்சர்களுக்கு கூட்டுப் பொறுப்பு உள்ளதால் அவர்களுக்கு மாத்திரம் தான் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர வேண்டும் என்று ஆளும் தரப்பின் இளம் உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவர்களின் புலமையை வெளிப்படுத்துகிறது.

பாராளுமன்ற் நிலையியற் கட்டளையின் பிரகாரம் தான், பாராளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இருப்பினும் அதில் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. சம்பிரதாயத்தின் பிரகாரமே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுகிறது. நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எவ்வித வரையறைகளும் கிடையாது.

பாராளுமன்றத்தில் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப் பட்டுள்ளன.ஆகவே அமைச்சரவை அமைச்சர்களுக்கு மாத்திரம் நம்பிக் கையில்லா பிரேரணை கொண்டு வரப் படவில்லை என்பதை ஆளுங்கட்சி விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அதற்கு போலியான காரணிகளை குறிப்பிடுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துடன் இராணுவத்தின் ஒருசில அதிகாரிகள் தொடர்பு பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார்.

பயங்கரவாதி சஹ்ரான் உட்பட அவரது தரப்பினர் கிழக்கு மாகாணத்தில் அடிப்படைவாத செயற் பாடுகளில் ஈடுபட்டனர். அக்காலப் பகுதியில் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக அருண ஜயசேகரவே பதவி வகித்தார்.

இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டு கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்த அருண ஜயசேகரவை மாத்திரம் பாதுகாக்க அரசாங்கம் முயற்சிப்பது எவ் விதத்தில் நியாயமாகும். இராணுவத்தின் மீது பற்று இருக்குமாயின் அருண ஜயசேகர பதவி விலக வேண்டும் என்றார். (ந-7)

## சி.ஐ.டியில் ஆஜராகுமாறு ரணிலுக்கு அழைப்பு

இலங்கையின் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் (CID) முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர் வரும் 22ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆஜராகுமாறு அறிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு அதிகாரிகளால் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணைகளின் போது முன்னாள் அமைச்சர்களும் இவ்வாறு விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (ந-7)




நல்லூரானுக்கு நாளை தேர்

பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்



உங்கள் கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com



கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறைப் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி ச.குமுதினி அவர்களின் அன்புத் தந்தை

அமரர் வல்லிபுரம் சிவானந்தம்



அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கின்ற குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம் (5097)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்

சபைக்குச் சொந்தமான சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்தில் கிழக்குப் புறமாக புதிதாக அமைக்கப்பட்ட மேல்மாடி கடைகள், சங்கரத்தை சந்தை மேல்மாடி கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

07.08.2025 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தலில் கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி 2025.08.07 - 2025.08.28 பி.ப 03.00.மணிவரை எனப் பிரசுரிக்கப்பட்டது. இத்திகதியினை 2025.08.07 - 2025.08.27 பி.ப 03.00 மணிவரை என திருத்தி வாசிக்கவும்.

தலைவர், பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

20.08.2025


கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் திரு.மா.பிரதீபன் அவர்களின் அன்புத் தாயார்



திருமதி விமலாதேவி மாணிக்கராசா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1469)

பிறப்பு 04.08.1950 இறப்பு 19.08.2025

ஆழ்ந்த அனுதாபங்கள்:– யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் கைவிடப்பட்ட 300 சிறுவர்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஒரு மாதத்திற்குள் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்பட்ட மற்றும் வீதிகளில் கைவிடப்பட்ட 300 சிறுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், குறித்த சிறுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அவர்களின் பராமரிப்பையும், பாதுகாப்பையும் உறுதி செய்யக்கூடிய பாதுகாவலர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களிடம் குறித்த சிறுவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும் குறித்த சிறுவர்களின் பாடசாலை கல்விச் செயற்பாடுகளை முறையாகப் பராமரிக்கவும், அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசாங்கம் பொறுப்பேற்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சிறுவர்களை வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுக்க சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தொடர்ந்து கண்காணித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். (நி)


## ஈரவிழிகளுடன் 13 ஆம் ஆண்டில்

வையத்துள் -12.07.1943

தெய்வத்துள் -13.09.2012

யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்
விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட

அமரர். சின்னத்தம்பி செல்லத்துரை
(சாத்திரியார்)

திதி - ஆவணி திரியோதசி தேய்பிறை
(20.08.2025)



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

இல.45/2, சாத்திரியார் கோட்டம்,
விசுவமடு.

(1465)

பாசமுடன்
குடும்பத்தினர்



## சிவன் அடிசேர்ந்தாள் செல்வராணி
## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
09 - 04 - 1955

இறப்பு
17 - 08 - 2020

அமரர். செல்வராணி கானதாசன்

ஆவணி மாதம் துவாதசி தேய்பிறை 20.08.2025

கண்ணகியை வென்ற கற்புக்கு அரசி
மணாளனே மங்கையின் பாக்கியம்
கணவனே கண்கண்ட தெய்வம் என்ற
வள்ளுவரின் தத்துவ வரிகளுக்கு அமைய
வாழ்ந்து காட்டியவளே
எங்கள் அன்புத் தெய்வம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(1464)

இல.60, தட்டயமலை,
ஒட்டுசுட்டான்


## மேலும் ஒரு...

பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையிலேயே மன்றால் விளக்கமறியல் காலம் நீடிக்கப்படும் உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்றைய வழக்கு விசாரணையின் ஓர் அங்கமாக அடையாள அணிவகுப்பும் இடம்பெற்றிருந்தது.

மன்றில் பிரசன்னமாகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகளான கெங்காதரன், சுபா, தனஞ்சயன் உள்ளிட்டோர் விசாரணைகள் முழுமையடையாமல் இராணுவத்தினருக்கு பிணை வழங்கக்கூடாது என சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதவான் பிரதீபன் நான்கு இராணு வத்தினரையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். (ந-7,299)

## பரந்தன்...

நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 31ஆம் திகதி கிளிநொச்சி ஏ9 வீதியின் பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சி நோக்கிச் சென்ற பெண் ஒருவரை அதே திசையில் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்துடன் தொடர்பு பட்ட டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று (19) முற்படுத்தியபோது குறித்த சாரதி வாகனத்தை செலுத்தும் போது போதைப்பொருள் பாவனைக்கு உட்பட்டிருந்தார் என்பது தொடர்பான அறிக்கையும் நேற்று மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 02ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதுடன் டிப்பர் வாகனத்தின் உரிமையாளரையும் சந்தேக நபராக மன்றில் முன்னிலைப் படுத்துமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (ந-7,315)

## ஜனாதிபதி...

இந்நிலையில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்ட அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களைச் சந்திப்பதற்கும் அரசாங்கம் இடமளிக்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மிகமோசமான சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும், நம்பகரமான உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறை எதுவும் அமுலில் இல்லாத நிலையில், நீதியை அடைந்து கொள்வதற்குப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழிகாட்டுவதற்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை விடயத்தில் பேரவைக்கும், ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் இரு வருடங்களுக்குப் புதுப்பிக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆட்சிபீடமேறி சுமார் ஒரு வருடம் பூர்த்தியடைந்திருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை உரியவாறு நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருக்கின்ற போதிலும், கரிசனைக்குரிய முக்கிய மனித உரிமைகள் விவகாரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது. அதேபோன்று மிகப்பாரதூரமான அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைப் பொறுத்தமட்டில் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு இன்னமும் தொடர்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரை நாட்டுக்கு வருகைதருமாறு கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அழைப்புவிடுத்திருந்தது. இருப்பினும் உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்வதிலும், பொருளாதார சவால்களை எதிர்கொள்வதிலும் தாம் கொண்டிருக்கும் கடப்பாடு குறித்து மாத்திரம் ஜனாதிபதி உரையாடினாரே தவிர, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை வெளிப்படையாக ஆதரிப்பதற்குத் தவறியிருந்தார்.

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டது முதல் "நல்லிணக்கம்" தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க பல முறை பேசியிருந்தார். ஆனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைத் தம்வசம் வைத்திருக்கும் அவரது அரசாங்கம் யுத்தகாலப்பகுதியில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிக்காட்டும் வகையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்ட அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களைச் சந்திப்பதற்கும் அரசாங்கம் இடமளிக்கவேண்டும். அத்தோடு ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வேறுபட்ட வகையில் பொதுக் குற்றவியல் தாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய செயன்முறை அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

மேலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், நாடளாவிய ரீதியில் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவிகளை அனுமதிக்க வேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியவகையில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தை மறுசீரமைக்கவோ அல்லது பதிலீடு செய்யவோ வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# மெய்வல்லுநர் போட்டிகள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தற்போது நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இதுவரை நடைபெற்று முடிவடைந்த விளையாட்டுப் போட்டிகளின் அடிப்படையில் பாடசாலைகள் பெற்றுக்கொண்ட நிலைகள் பின்வருமாறு;

## 5000 மீற்றர் ஓட்டம்



20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் முல்லைத்தீவு பாரதி வித்தியாலய மாணவி ரி.டெசினி தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவி ஏ.அனித்தா வெள்ளிப் பதக்கத்தையும், புங்குடுதீவு மத்திய கல்லூரி மாணவி ஏ.டிஷாணுகா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

## குண்டெறிதல்



20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி டி.ஜே.டெனிலா 9.23 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், மன்னார் கருங்கண்டல் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஆர்.பவிஷனா 9.06 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், வவுனியா பாரதிதாஸன் வித்தியாலய மாணவி ஜி.கிருஷாயினி 8.95 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

## தட்டெறிதல்



ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் முல்லைத் தீவு வித்தியானந்தா கல்லூரி மாணவன் ஜெ.சஸ்வின் 29.61 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் டி.அர்.அசோன் 29.30 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஆனைக்கோட்டை ரோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவன் ஜெ.சிவராஜ் 29.16 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

## ஈட்டி எறிதல்




20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் மன்னார் தோட்ட வெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி ஏ.ஜதுர்சிகா 31.88 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி மாணவி எஸ்.சந்தியா 28.70 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் தட்சணா மருதமடு மகா வித்தியாலய மாணவி கே.கோனிலா 28.34 மீற் றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

## உயரம் பாய்தல்



14 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலய மாணவி எம்.அவ்நவ் 1.61 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவன் எஸ்.பிரவீன் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் கே.கபிஷன் 1.55 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

## நீளம் பாய்தல்



20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மாணவன் ரி. நகீர்ஷன் 6.63 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், யாழ் இந்துக் கல்லூரி மாணவன் எஸ்.கஜானந் 6.64 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் எஸ்.கஜானன் 6.43 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி

**(கொழும்பு)**

**பரந்தன் - கரைச்சி, முல்லைத்தீவு வீதியின் வட்டுவாகல் பாலத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வட்டுவாகல் பாலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் களப்புக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இறுதியாக திருத்தப்பட்டுள்ள குறித்த பாலம் தற்போது பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்ற நிலையில் கடந்த காலத்தில் மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம், இதனை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால், இருவழிப் பாதையுடன் கூடிய புதிய பாலமாக அதனை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக, தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமையின் அடிப்படையில் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# வீட்டுத்தோட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(அராலி)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மாணாக்க உழவர் என்னும் வீட்டுத்தோட்டப் போட்டியை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக் குறை, நஞ்சற்ற உணவுற்பத்தி, மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் இப்போட்டியின் இந்த ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்களும், புதிதாக ஈடுபட விரும்பும் மாணவர்களும் இந்த ஆண்டுக்குரிய மாணாக்க உழவர் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.

இப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கான செயன்முறை வழிகாட்டற் கருத்தமர்வும் விதைப்பொதிகள் விநியோகமும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வீதியில், நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதனி சிவதீபன், இயற்கை விவசாயச் செயற்பாட்டாளர் காரை சி. நிரோசன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் நாளை மறுதினம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு முன்பாக 077 796 9644 அல்லது 074 147 1759 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். இவ்வாறு பெயர்களைப் பதிவு செய்பவர்கள் மாத்திரமே 24ஆம் திகதி நடைபெறவுள்ள செயன்முறை வழிகாட்டல் கருத்தமர்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் சிறப்பாக வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. (8-104)

# முடிவுகளுக்கு உடன்பட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை

## தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பில் அமைச்சர் நலிந்த

(கொழும்பு)

கைரேகை வருகை மற்றும் மேலதிக நேர ஊதியம் தொடர்பான அரசாங்க முடிவுகளுக்கு தபால் தொழிற்சங்கங்கள் உடன்பட்டால் மட்டுமே அவர்களுடன் சந்திப்பு நடத்தத் தயாராக இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். குறுகிய கால வேலை நிறு த்தங்கள் கூட தபால் துறைக்கு நிதி இழப்பை ஏற்படுத்தும். நீடித்த வேலைநிறுத்தங்கள் திறைசேரியை சீர்குலைத்து எதிர்கால சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளைப் பாதிக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தபால் தொழிற்சங்கங்கள் முன்வைத்த 19 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளை அரசாங்கம் தீர்த்து வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலதிக நேரக் கொடுப்பனவுகளில் மாற்றங்கள்மற்றும்கைரேகை முறையை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன் வைத்து தபால் ஊழியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் நாடளாவிய வேலைநிறுத்தத்தைத் தொட ங்கினர்.

இந்த வேலைநிறுத்தம் நாடு தழுவிய முக்கிய சேவைகளை சீர்குலைத்துள்ளது. (நி)

# கடன் அட்டைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் வட்டி விகிதங்கள் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இலங்கையில் புதிய செயலில் உள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை 10,934 அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

புதிய அட்டைகள் சேர்க்கப்பட்டதன் மூலம், ஜூன் மாத இறுதியில் நாட்டில் செயலில் உள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை 2,075,744 ஆக அதிகரித்துள்ளது.

மே மாத இறுதியில் இது 2,064, 810 ஆக இருந்தது, இது 0.52 வீத அதிகரிப்பாகும்.

இதற்கிடையில், இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் செயலில் உள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை, 3.36 வீதம் அதிகரித்துள்ளது என்று தரவுகள் தெரிவிக்கின்றன. (நி)


**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (1461)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

**077 839 3974, 076 889 1308**

**இந்திய சாஸ்திரியார் வருகை**

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத் தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்

தொடர்புகளுக்கு : 076 682 7368

No.139, Main Street, Ja...

யாழ். நீதிமன்றத்துக்கு அருகாமையில்

(முன்பதிவு செய்து வரவும்) (5073)

*Lions International District 306 D12*

**லயன்ஸ் சர்வதேச மாவட்டம் 306 D12 நடாத்தும் மாவட்ட கார்னிவல் மற்றும் இலவச மருத்துவ சேவைகள்**

பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திருவிழா காலத்துக்கான லயன்ஸ் காரியாலத்தில் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும் இலவச இரத்த அழுத்த பரிசோதனை இலவச் நீரிழிவு பரிசோதனை நடைபெற்று வருகின்றது.

மேலும் எமது காரியாலத்தில் புதிய அங்கத்துவம் லயன்ஸ் பற்றிய மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச லயன்ஸ் மாவட்டம் 306 D12 நடாத்தும் மாவட்ட கார்னிவல் 20.08.2025 தொடக்கம் 24.08.2025 வரை மாலை 5 மணி தொடக்கம் இரவு 12 மணிவரை நல்லூர், சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது.




லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு : (Lions Eye Hospital Financial Contributors to Contact)


லயன். Dr K.M.பத்மநாதன் (லயன்ஸ் மாவட்ட ஆளுநர் 306 D12)

077 732 3702 yaalwesco@gmail.com

...306d12@gmail.com, district306d12@gmail.com

We Serve With Humanity (C-3678)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 22 ஆம் நாள் திருவிழாவான மாம்பழத் திருவிழா, பக்தர்கள் புடைசூழ நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. காலை 6.45 மணியளவில் வசந்தமண்டப பூஜை இடம்பெற்று, தொடர்ந்து முருகப்பெருமானும் பிள்ளையாரும் வெளி வீதி உலா வந்து மாம்பழத் திருவிழா இடம்பெற்றது. (படங்கள்- சிவசாந்தன்)




## கா! நல்லைக் குமரேசனே!

நக்கீரன் நாவினிலே தக்கதமிழ் சொக்கிவர
நல்லாற்றுப் படைபாடியே
மிக்கதொரு மெய்ப்புலமை யக்கணம் மலர்ந்துவரப்
பக்கபல முந்தனருளே
திக்குவா யானதிருக் "குமரகுரு பரருக்கும்"
தீந்தமிழ் செப்பவைத்தாய்
இக்கணம் வந்திங்கு இடர்களைந் தாளுவாய்
இசைநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## வரமருள்வாய் வேலவா!

வேல் கொண்டு தேரேறி வலம் வரும் உனைக்கண்டு
ஊர் கொண்ட வினையெல்லாம் வேரோடு
அகன்றோடும் வேளையிலே,
ஊர் கண்டு உனை வணங்கி உளம் மகிழ
வேண்டுமையா,
பார் காக்கும் பார்வதியின் சீரான புத்திரனே சீரோடு
நாம் வாழ
தேரேறி நீ வந்து வேண்டுவதெல்லாம் தந்துவிடு
நல்லவனே எங்கள் நல்லூரவனே.

திருமதி. தம்பிராஜா தேவாபரணம்,
வதிரி கரவெட்டி.

## 'கடல் வினை நீக்கு'

சப்பைரதம் ஏறிவரும் சத்திய நாயகா எம்
தப்பை யுணர்த்திட எழுந்துவா- தெப்பமாய்
நாம் கரைசேர கனைகடல் வினைநீக்கு
தேம்பியழ வைத்திடாதே.

கே.எஸ்.சிவஞானராஜா

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு - இசை அர்ச்சனை அக்கடமி மாணவர்கள், வயலின் -செல்வி வாசுகி சுவாமிநாதசர்மா மற்றும் செல்வி நந்தினி சுவாமி நாதசர்மா, மிருதங்கம் - எஸ்.சுவாமிநாதசர்மா, சு. அரவிந்த சுப்ரமணிய சர்மா மற்றும் சு. அனந்தநாராயணசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- கலாநிதி ந. வி. மு. நவரத்தினம், வயலின்- இ.நிறோசன், மிருதங்கம்-வ. நமணசர்மா, கெஞ்சிரா- செல்வன் நமணசர்மா லயசர்மா, மோசிங்- செல்வன் நமண சர்மா கானாமிருத சர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# அரசாங்க அதிபர் - தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க நேற்றுக் காலை 9 மணிக்கு அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.



இவர்களுடன் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ.சசீலன் உடனிருந்தார்.

இச் சந்திப்பில் சுமூகமாக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் தொடர்பாகவும் ஆணையாளர் நாயகம் கேட்டறிந்து கொண்டார். (8)

# கனிய மணல் அகழ்வுக்கு எதிராக 17 ஆவது நாளாகவும் போராட்டம்

(மன்னார்)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை 17 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் பனங்கட்டிக்கொட்டு, ஜிம் பிரவுன் நகர், எமில் நகர், இத்திக்கண்டல், தலைமன்னார் கிராமம் ஆகிய கிராம மக்களும், மீனவர்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியிருந்தனர். (8-285)

# நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் "அருளுரை" இன்று புதன் கிழமை இரவு 8 மணி முதல் 8.30 மணிவரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "எந்தாயும் தந்தையும் நீ" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து நல்லூர் ஆலயத்திற்கு நாகம் தாங்கிய வேல் பவனி நேற்று முன்தினம் கடல் மார்க்கமாக குறிகட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்தது. பாத யாத்திரிகர்கள் யாழ்ப்பாணம்- புங்குடுதீவு வீதி ஊடாக யாழ். நகரப் பகுதியை வந்தடைந்தது. நல்லைக் கந்தன் தேர் உற்சவத்தில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்- கஜிந்தன்)

# அன்னதான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நீர் வேலைப் பகுதியின் இந்து மன்றத்தினால் நல்லூர் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்களின் போது நடத்தப்படும் அன்னதான நிகழ்வு இவ் வருடமும் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் நாளை வியாழக்கிழமை தேர்த்திருவிழா மற்றும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழா ஆகிய இரு தினங்களும் யாழ். மாநகர சபை அருகாமையிலுள்ள ஆயுர்வேத மண்டபத்தில் இவ் அன்னதான நிகழ்வு நடைபெறவுள்ளதென கலியுக வரதன் இந்து மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சகௌவியம் எனும் பொக்கிசம்: புதுமையும் மகிமையும்



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள்**
**எம்மினிய உறவுகளே!**

விரைந்து வாழும் உலகில் எம்மையும் ஏதோவொருவகையில் நாம் திணித்து வைத்திருக்கின்றோம் என்பதும் எம்மை கவனிக்க நேரமேயில்லாமல் நொடிக்குநொடி எதையோ தேடி ஓடிக்கொண்டிருக்கின்றோம் என்பதனையும் நாம் மறந்துவிடலாகாது. நாம் சாதித்தது என்ன? எதனைத்தேடி இவ்வளவு அவசரம் என்னும் மூத்தோர் வினாவுக்கு விடை கிடைக்கவில்லை. பணமும் புகழும் பதவியும் தேடியோடியபடி எம்மையும் மறந்து சுற்றமும் உற்றமும் தேவையற்று அவசர உலகில் எமது நடவடிக்கைகள் இருப்பது போல உணவையும் அந்த அவசரத்துடனேயே எமக்குள்ளே திணித்துக் கொள்கின்றோமே.

அதனால் ஏற்படும் அசௌகரியங்களும் சுகாதார சீர்கேடும் இறுதியில் எம்மை விரைந்து காலனின் பிடியில் தள்ளிவைத்து விடுகின்றன. என்னதான் விரைவு உணவுகளும் பலவகை பானங்களும் பெட்டி பெட்டியாக வந்து இறங்கினாலும் எமது உணவு சேதன உணவாக நஞ்சற்றதாக இருக்க வேண்டும் என்னும் தேவை தற்போது பரந்துபட்ட அளவில் உருவாகியிருக்கின்றது.

பஞ்சகௌவியம் என்பது பசுவிலிருந்து பெறப்படும் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுவது அதனது சிறப்பு. இதில் உடற்சுகாதாரத்தினை மேம்படுத்தும் பதார்த்தங்கள் இருப்பதுடன் மருத்துவ குணங்களும் நிறைவாக காணப்படுவதாகும். ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவத்தில் பஞ்சகௌவியம் எனப்படுவது பால், நெய், தயிர், சாணம், சிறுநீர் என்பனவற்றை கலந்து பெறப்பட்ட பொருளாகும். இந்தப் பொருளில் ஐந்து வகை பெறுமதிகளுக்கிணைவான சக்தி இருப்பதாக ஊகிக்கபட்ட போதிலும் மருத்துவ ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. பஞ்சகௌவியம் முழுக்க முழுக்க சேதனப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்டிருப்பதுடன் இதனை பயன்படுத்துவதனால் எந்தப் பக்கவிளைவுகளோ பாதிப்புகளோ ஏற்படாது.

இவை ஒவ்வொன்றும் தனித்துவமான தனியான குணங்களைக் கொண்டிருப்பதனாலும் இவை தாவரத்திற்கோ அல்லது மனிதனுக்கோ எந்த விளைவுகளையும் ஏற்படுத்தமாட்டாது என்பதனை ஆய்வு மூலம் உறுதி செய்துள்ளனர்.

பஞ்சகௌவியத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் மருத்துவ செயன்முறையை பஞ்சகௌயபதி அல்லது கௌயபதி என அழைக்கப்படுகின்றது. ஏனைய மருத்துவ முறைகளான அலோபதி, கோமியோபதி மற்றும் நச்சுரோபதி (Naturopathy) என்பனவற்றைப் போல இதனை பஞ்சகௌயபதி அல்லது கௌயபதி என அழைக்கப்படுகின்றது. பஞ்சகௌயபதி பரிகரணம் பலவிதமான நோய்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது. ஆஸ்துமா, புளு, ஒவ்வாமை, புண் மாறுதல், இதய நோய்கள், வாத நோய்கள், வயிற்றுப்பொருமல் மற்றும் சமிபாட்டுத்தொகுதி நோய்கள் என்பனவற்றிற்கு பரிகாரமாக பயன்படுத்தப்படுகின்றது. மேலும் புற்றுநோய், எயிட்ஸ் மற்றும் நீரிழிவு நோய்களுக்கும் பரிகரிக்கப்படும் கோமாதாவின் பொருட்களில் இவ்வளவும் இருக்கின்றது.

சேதன விவசாயத்தில் பஞ்சகௌவியம் முக்கிய இடுபொருளாக பயன்படுத்தப்படுகின்றது. சேதன விவசாயம் சாத்தியமா என்னும் கேள்வி எழும்பொதெல்லாம் பஞ்சகௌவியத்தின் பயன்பாடு உள்ளவரை அது சாத்தியமே என ஆணித்தரமாக கூறலாம். இதனது பயன்பாட்டின் மூலம் பயிர்ச்செய்கைக்கு எந்தவிதமான அசேதன இரசாயனங்களை குறிப்பாக அசேதன இரசாயன பசளைகள் மற்றும் பீடைநாசினிகளை பயன்படுத்த வேண்டிய தேவை எழாது. சேதன விவசாய செய்கையில் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பஞ்சகௌவியம் உதவியாயிருக்கும்.

பஞ்சகௌவியத்தைப் போல எந்த இரசாயனமும் விலை குறைவாகவும் சூழலுக்கிணைவானதுமாக இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. மண்ணின் வளத்தை மேம்படுத்தவும் மண்புழுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் மண்ணுக்கு தேவையான ஊட்டச்சத்தை அதிகரிக்கவும், சேதன உரமாக தொழிற்படுவதனால் பயிரின் விளைச்சலை அதிகரிக்கவும் செய்யும். இவற்றுடன் மாட்டுசலம் மற்றும் சாணம் என்பன உயிர்வாயுவை உற்பத்தி செய்யவும் உதவிசெய்யும்.

பாலைப் புளிக்கவைப்பதனால் தயிர் மற்றும் மோரும் என்பன பெறப்படுகின்றன. ஆயினும் இவ்வாறு புளிக்கவைக்கும் போது ஸ்ரெப்ரோகொக்கசு, அசிடோபைலசு, லக்ரோபசிலசு ஆகிய பக்ரீறியாக்கள் எமக்கு கிடைக்கின்றன. இவை உணவை நன்றாக ஜீரணமாக்க உதவுகின்ற நன்மை தரும் பக்ரீறியாக்களாகும். தயிர் மற்றும் யோகட் ஆகியனவற்றை உணவாக்கும் போது இவை இலகுவாக எமக்கு கிடைக்க ஏதுவாகின்றன. இலக்ரிக்கமிலம் உற்பத்தியாக்கும் பக்ரீறியாவும் இதன் மூலம் கிடைக்கும். தயிரில் புரதங்கள், விற்றமின்களான ஏ, பி, டி, மற்றும் ஈ என்பனவற்றுடன் கல்சியம், பொசுபரசு, மக்னீசியம், துத்தம் என்பன எமது உடலுக்கு கிடைக்கின்றன. எதுவாக இருப்பினும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதன் விளக்கமாக தயிரையோ யோகட்டையோ அளவுக்கதிகமாக உணவாக எடுக்கக்கூடாது.

மாட்டுச்சாணத்தில் பல நன்மை தரும் பக்ரீறியாக்கள் இருக்கின்றன. சக்காரோமைசிசு, லக்ரோபசிலசு, பசில்லசு, ஸ்ரோகொக்கசு, கன்டிடா என பலவகை பக்ரிறீயாக்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளன. இதிலும் பல விற்றமின்கள் தாதுப்பொருட்கள், பொட்டாசியம் , நைதரசன், ஒட்சிசன், காபன் செலுலோசு, கெமிசெலுலோசு என பலவகையான சத்துக்கள் இருக்கின்றன. சாணம் பக்ரீறியா எதிரியாகவும் பங்கசு எதிரியாகவும் காணப்படுகின்றது.

சோரியாசிசு மற்றும் எக்ஸ்சிமா போன்றவற்றை குணமாக்கும் தன்மை கொண்டது. சாணத்தை அதிகளவில் பயன்படுத்துவதனால் மண்ணில் நுண்ணங்கிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அத்துடன் மண்ணின் வளம் மேலும் அதிகரிக்கும். மண்ணில் மண்புழுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் மண்வளமுள்ள மண்ணாக வாழும் மண்ணாக பரிணமிக்கும்.


மாட்டுசலத்தில் பல விற்றமின்கள், நொதியங்கள், ஓமோன்கள், உப்புக்கள் இவற்றுடன் தாதுப்பொருட்களும் காணப்படுகின்றன. இதனை கொள்கலனுள் அடைத்து மண்ணினுள் புதைத்து நொதிக்க வைத்துவிட்டு அதனுடன் வேண்டியளவு நீர் கலந்து பயிர்களுக்கு தெளிக்கும் போது பயிர்கள் தழைச்சத்தை உள்ளீர்த்து சிறப்பாக வளர்கின்றன.

விளைச்சலும் அதிகரிக்கின்றது. பலவித நன்மைகளுள்ள பசுவின் பொருட்கள் அனைத்தும் சிறந்த பயன்களைத் தரக்கூடியனவாக காணப்படுவதனால் அவற்றின் பயன்பாட்டை நாம் அதிகரிக்கும் போது எமக்கான சேதன சத்து இலகுவாக கிடைத்துவிடும். பசுபால், தயிர், நெய், மோர் மற்றும் சாணம் என்னும் ஐந்துவகை பயனுள்ள பொருட்களை முறையாக பயன்படுத்தி சேதன முறையில் பயிர்களை வளர்க்கவும் அவற்றிலிருந்து நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்யவும் முடியும். பஞ்சகௌவியம் என்னும் பொக்கிசம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதாக எமது பண்ணை முறைமையை மாற்றிக் கொண்டால் அசேதன விவசாய உள்ளீடுகளுக்கான தேவை எழாது.

பஞ்சகௌவியத்தினை அடிப்படையாக வைத்து செப்பு நனோ துணிக்கைகள் மற்றும் சில்வர் நனோ துணிக்கைகள் ஆய்வு மூலம் பெறப்பட்டிருக்கின்றன. விஞ்ஞானத்தின் உச்சத்தை தொடும் தொழில்நுட்பத்தினை பஞ்சகௌவியத்தை அடிப்படையாக வைத்து உற்பத்தி செய்திருக்கின்றார்கள். இந்த நனோ துணிக்கைகள் விவசாய விஞ்ஞான துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என கூறியிருக்கின்றனர்.

தெரிந்தும் நோயை உண்டாக்கும் என அறிந்தும் நாம் வீணாக அசேதன உள்ளீடுகளை நம்பியிருக்கும் காலத்திலிருந்து எம்மை விடுவித்து எமது உடல்நலம் கருதி எமது குடும்பத்தாரினது நலன்கருதி நஞ்சற்ற உணவுகளை உற்பத்தி செய்து உண்ணும் நிலைமைக்குள் அவசியம் வந்தாகவேண்டும். தவறின் அரைகுறையில் நாம் எம்மையிழந்து விண்ணேகவேண்டியிருக்கும். எமது உறவுகளுக்காக ஒரு கணமாவது நாம் சிந்தித்து செயலாற்றுவது அவசியம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தாய்வான் எல்லையில் சீனப் போர் விமானங்கள்



(தைபே)

தாய்வான் கடல் எல்லையில் சீனாவின் இராணுவ விமானங்களும், கடற்படை கப்பல்களும் இயங்குவதைத் தாய்வான் கண்டறிந்துள்ளது.

தங்கள் நாட்டு எல்லையில் சீன விமானங்கள், கப்பல்கள் நடமாட்டம் இருப்பதை தாய்வான் பாதுகாப்புத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தி உள்ளது. இதுகுறித்து, தமது சமூக வலைத்தளப் பக்கத்தில் ஒரு பதிவையும் வெளியிட்டு உள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது, தாய்வானைச் சுற்றி 10 இராணுவ விமானங்கள், 6 போர்க்கப்பல்கள் கண்டறியப்பட்டுள்ளன. விமானங்களில் 2 விமானங்கள் இடைநிலைக் கோட்டை கடந்து நுழைந்துள்ளன. நாங்கள் நிலைமையைக் கண்காணித்து சூழலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு தாய்வான் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தாய்வான் மீது சீனா தமது ஆதிக்கத்தை செலுத்த தீவிரமாக செயலாற்றி வருவதால் தங்கள் நாட்டுக்கு ஆதரவாக நிற்க இங்கிலாந்து முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சன் வலியுறுத்தினார் என்று தாய்வான் நாட்டு செய்தி ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. (நி)

## விடிய விடிய பேச்சு... விழுந்ததும் தா...

## உக்ரைன் மீது பாய்ந்த ர...

(கீவ்)

உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக நேற்று முன்தினம் ரஷ்ய ஜனாதிபதி புடின், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார் 3 மணி நேரம் இருவரும் ஆலோசனை நடத்தினர். ஆனால் எந்த முடிவும் எட்டப்படவில்லை. இந்நிலையில் உக்ரைனில் உள்ள கார்கிவ் நகரில் ரஷ்யா நேற்று நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஒரு வயது குழந்தை உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

கார்கிவ் நகரில் உள்ள ஐந்து மாடிக் குடியிருப்பு கட்டடத்தை ரஷ்ய ட்ரோன் தாக்கியது. இந்த சம்பவத்தில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 20 பேர் படுகாயமடைந்ததாகவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பயணிகள் படகு கவிழ்ந்து விபத்து!

### நைஜரில் 40 பேர் பலி



(நைஜர்)

நைஜீரியாவின் சோகோட்டோ மாநிலத்தில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பேர் காணாமல் போயுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த பகுதியிலுள்ள பிரபலமான சந்தைக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற படகொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற போது குறித்த படகில் 50 பேர் பயணித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பத்து பேர் மீட்கப்பட்டுள்ளதுடன், காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நைஜீரியாவின் நைஜர் மாநிலத்தில் கடந்த வாரம் 100 பேர் பயணித்த படகொன்று விபத்துக்குள்ளானதில் 13 பேர் வரை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மும்பையில் கனமழை பாடசாலைகள் மூடல்



(டில்லி)

மும்பை மற்றும் அதன் அருகிலுள்ள கொங்கண் கடற்கரைப் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அலுவலகங்கள் தனியார் என அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மூன்றாவது நாளாக, மும்பை நகரம் மற்றும் மும்பை புறநகர் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்திய வானிலை ஆய்வு நிலையத்தின் பிராந்திய வானிலை ஆய்வு மையம் மும்பை பெருநகரப் பகுதியை சிவப்பு எச்சரிக்கையின் கீழ் வைத்துள்ளது.

ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில், மும்பை பெருநகரப் பகுதியின் பல இடங்களில் 350 மி.மீக்கும் அதிகமான மழை பெய்ததால் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதற்கிடையில், மும்பை பல்கலைக்கழகம் ஒகஸ்ட் 19 முதல் ஒகஸ்ட் 23 வரை திட்டமிடப்பட்டிருந்த அனைத்து பரீட்சைகளையும் ஒத்திவைத்துள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை குழுக்கள் விழிப்புடன் உள்ளன.

வீதிப் போக்குவரத்து முற்றிலும் சீர்குலைந்திருந்தாலும், புறநகர் ரயில்கள் இயக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...சுவார்த்தை ...தாக்குதல்!
## ...ரஷ்ய ட்ரோன்கள்



காயமடைந்தவர்களில் ஆறு குழந்தைகளும் அடங்குவர்.

தகவல் கிடைத்தவுடன், மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியவர்களை மீட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு கார்கிவ் மீது ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

அந்த சம்பவத்தில் 13 வயது சிறுவன் உட்பட எட்டு பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

# உக்ரைனின் பாதுகாப்பிற்கு அமெரிக்கா உதவும்
## ட்ரம்ப் உறுதி

(வோஷிங்டன்)

உக்ரைனில் ரஷ்யாவின் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு ஒப்பந்தத்திலும் உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்ய அமெரிக்கா உதவும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் திங்களன்று ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியிடம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அலாஸ்காவில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை ட்ரம்ப் சந்தித்த சில நாட்களுக்குப் பின்னர், ஜெலென்ஸ்கி மற்றும் ஐரோப்பிய நட்பு நாடுகளின் குழுவை வரவேற்ற வெள்ளை மாளிகையில் நடந்த ஒரு அசாதாரண உச்சிமாநாட்டின் போது ட்ரம்ப் இந்த உறுதிமொழியை அளித்தார்.

சந்திப்பின் பின்னர், "பாதுகாப்பைப் பொறுத்தவரை, நிறைய உதவிகள் இருக்கும்," என்று ட்ரம்ப் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகள் இதில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வாக்குறுதியை "ஒரு பெரிய முன்னேற்றம்" என்று ஜெலென்ஸ்கி பாராட்டினார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்திப்புகளுக்குப் பின்னர் ஒரு செய்தியாளர் சந்திப்பில், பாதுகாப்பு உத்தரவாதத்தின் ஒரு பகுதி அமெரிக்காவிற்கும் உக்ரைனுக்கும் இடையே $90 பில்லியன் (£67 பில்லியன்) ஆயுத ஒப்பந்தத்தை உள்ளடக்கும் என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

இதில் உக்ரைனிடம் இல்லாத அமெரிக்க ஆயுதங்களும் அடங்கும், அவற்றில் விமான அமைப்புகள், ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் உள்ளடங்கும்.

கீவிற்கான பாதுகாப்பு உத்தரவாதங்கள் 10 நாட்களுக்குள் செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)





# புதிய இடம் நோக்கி நகரும் சுவீடனின் பழமையான தேவாலயம்!

(சுவீடன்)

சுவீடனின் அடையாளமான கிருனா தேவாலயம் நேற்று செவ்வாய்க்கிழமை தனது புதிய இடத்தை நோக்கிய இரண்டு நாள் பயணத்தை ஆரம்பித்துள்ளது.



தேவாலயம் அமைந்துள்ள பகுதியில் நிலம் தாழிறக்கம் காரணமாக ஆபத்தில் இருந்த 113 ஆண்டுகள் பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தேவாலயத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

600 தொன் எடையும், 1912 ஆம் ஆண்டுக்கு முந்தைய பழமையானதுமான இந்த தேவாலயத்தை புதிய நகர மையத்திற்கு நகர்த்துவதற்காக தொழிலாளர்கள் ஏற்கனவே அதன் அஸ்திவாரங்களிலிருந்து தூக்கி சிறப்பாக கட்டப்பட்ட டிரெயிலரில் ஏற்றியுள்ளனர்.

மணிக்கு 500 மீ அதிகபட்ச வேகத்தில் பயணிக்கும் இந்தப் பயணம் இரண்டு நாட்கள் திட்டமாகும்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இரும்புத்தாது சுரங்கப் பணிகளின் பின்னணியில் தேவாலயம் அமைந்துள்ள கிருனாவின் பழைய நகர மையம் தாழிறங்கங்களினால் ஆபத்தில் உள்ளது.

ஆர்க்டிக் வட்டத்திற்கு வடக்கே 145 கி.மீ தொலைவில் அமைந்துள்ள கிருனாவில் கட்டடங்கள் பரவலாக இடமாற்றம் செய்யப்படுவதில் தேவாலயத்தின் இந்த நடவடிக்கை மிகவும் அற்புதமான மற்றும் அடையாள தருணமாகும்.

தேவாலயம் தவிர கிருனாவின் சுமார் 3,000 வீடுகளும் சுமார் 6,000 மக்களும் இடம்பெயர வேண்டிய ஏற்பட்டுள்ளது. (நி)

# மிஸ் யுனிவர்ஸ்
## பட்டம் வென்ற ராஜஸ்தான் அழகி!



(டில்லி)

மிஸ் யுனிவெர்ஸ் இந்தியா பட்டத்தை ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த மணிகா விஸ்வகர்மா தட்டிச் சென்றுள்ளார்.

மிஸ் யுனிவர்ஸ் போட்டிக்கான இந்தியாவின் போட்டியாளரை தெரிவு செய்வதற்கான, மிஸ் யுனிவெர்ஸ் இந்தியா போட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்றது. ஏராளமான போட்டியாளர்கள் இப் போட்டியில் கலந்துகொண்டனர். இறுதியில் அந்த மாநிலத்தை சேர்ந்த மணிகா விஸ்வகர்மா மிஸ் யுனிவர்ஸ் இந்தியா பட்டத்தை வென்றார். கடந்த ஆண்டு வெற்றியாளர் ரியா சிங்கா அவருக்கு மகுடம் சூட்டினார்.

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த தன்யா சர்மா, ஹரியானாவைச் சேர்ந்த மேஹக் திங்க்ரா ஆகியோர் அடுத்தடுத்த இடங்களை பிடித்தனர். இந்த ஆண்டு இறுதியில் நவம்பர் மாதம் தாய்லாந்தில் நடைபெற உள்ள 74ஆவது மிஸ் யுனிவெர்ஸ் போட்டியில், இந்தியா சார்பில் மணிகா போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உணவுப் பாதுகாப்பற்றோர் விகிதம் குறைந்தது

**(கொழும்பு)**

**இலங்கையில் உணவு பாதுகாப்பற்றோர் விகிதம் 24 சதவீதத்தில் இருந்து 16 சதவீதமாகக் குறைந்துள்ளதாக உலக உணவுத்திட்ட பிரதிநிதி பிலிப் வார்ட் வெளிவிவகார வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜிதஹேரத்திடம் தெரிவித்தார்.**

நாட்டின் முன்னேற்றத்தைப் பாராட்டிய பிலிப் வார்ட், வறுமை குறைப்பு, உணவுப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு வலுப்படுத்துதல் போன்ற தேசிய முன்னுரிமைகளுடன் ஒத்துழைத்து தொடர்ந்தும் உலக உணவு திட்டம் ஆதரவு வழங்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

அதேநேரம், நிலையான வளர்ச்சி மற்றும் மக்களின் நலனில் முன்னேற்றத்தை உருவாக்குவதில் இலங்கை அரசு உலக உணவுத் திட்டத்துடன் தொடர்ச்சியான ஒத்துழைப்பில் கவனம் செலுத்துவதாக அமைச்சர் விஜித ஹேரத் இதன்போது குறிப்பிட்டார். (நி)




# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1979- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி-பா-52
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBA, Web Designer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15925

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:அனுசம்
உயரம்:5'9"
தகைமை/தொழில்- BSc,QS
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15926

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி-பா-35
உயரம்:5'4"
தகைமை/தொழில் : BSc, நில அளவையாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15927

பிறப்பு: 1984- இந்து
நட்சத்திரம்: மூலம்
கி-பா-74 1/4
உயரம்:5'7"
தகைமை/தொழில் - MBA, Accountant(UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15928

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்- பூரட்டாதி
உயரம்:5'5"
தகைமை/தொழில்: பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: வெளிநாடு(PR உள்ளவர்)
தொ.இ: B/15932

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in English, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15944

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-ரேவதி
1இல்சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15945

பிறப்பு-1989-இந்து
நட்சத்திரம்-மூலம்
கி-பா-73
12இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15951

பிறப்பு-2001-NRC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L, தையல்
எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்
தொ.இ: G/15952

பிறப்பு-1996- இந்து
நட்சத்திரம்- பரணி
கி-பா-1 1/2
உயரம்-5'4"
தகைமை/தொழில்: Senior Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15954

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 429

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அறிவால் வரும் ஆபத்து!

ஒரு குரு. இளம் சீடர்கள் எதிரிலே உட்கார்ந்திருந்து பாடம் நடத்திக்கொண்டிருந்தார்

சீடர்களுக்கு ஒரு ஆசை.

அதாவது ஒரு முக்கியமான மந்திரத்தை நம் குருநாதரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று.

அது என்ன மந்திரம் என்றால் இறந்தவரை உயிர்ப்பிக்கும் புனித மந்திரம். அதாவது இறந்தவர்களுக்கு மீண்டும் உயிர் உண்டாக்கும் மந்திரம்.

"குருவே! தயவு செய்து அந்த மந்திரத்தை எங்களுக்கு உபதேசிக்க வேண்டும்!"என்று கேட்டார்கள்.

"அது மிகவும் ஆபத்தானது அது எதற்கு உங்களுக்கு? வேண்டாமே!" என்றார் குரு.

"எங்களுடைய நம்பிக்கை உறுதிப்படுவதற்காகத்தான் கேட்கின்றோம். வேறு ஒன்றுமில்லை!" என்றார்கள் சீடர்கள்.

"பக்குவப்படாத அறிவு ஆபத்தானது!" என்றார் குரு. இது சீடர்களுக்குப் புரியவில்லை!

"அது எப்படிப் பக்குவப்படாத அறிவு ஆபத்தானது என்று சொல்கிறீர்கள். அப்படி என்றால் என்ன?" என்று கேட்டார்கள் சீடர்கள்.

குரு அதற்கு விளக்கம் கொடுத்தார்.

அந்த மந்திரத்தை எப்போது பயன்படுத்தவேண்டும் என்பதை அறியக்கூடிய ஞானம் ஏற்படுகின்ற வரைக்கும் அதைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பதுதான் நல்லது. இல்லை என்றால் ஆபத்து" என்றார்.

ஆனால் அந்த சீடர்கள் அதைக் கேட்கின்ற மாதிரி இல்லை! மிகவும் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

"சரி வாருங்கள் சொல்கிறேன்!" என்றார் குரு எல்லோரும் வந்தார்கள்.

அந்தப் புனித மந்திரத்தை அவர்களுக்கு இரகசியமாக உபதேசம் செய்தார். உபதேசம் செய்து விட்டு அவர்களுக்கு எச்சரிக்கையும் கொடுத்தார்.

"இந்த மந்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்ததற்கு அப்புறம்தான் உச்சரிக்க வேண்டும். அவசரப்பட்டு ஏதும் செய்துவிடக்கூடாது" அப்படி என்று ஒரு தடவைக்குப் பல தடவை எச்சரிக்கை செய்தார்.

சரி என்று சொல்லிவிட்டு அவர்கள் எல்லாம் மந்திரத்தை கற்றுக்கொண்டு எழுந்து போய்விட்டார்கள்.

ஒருநாள் அந்தச்சீடர்கள் எல்லாம் மணற்பாங்கான இடத்திலே நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு இடத்திலே எலும்புகள் குவியலாகக் கிடந்தது. உடனே இந்த சீடர்கள் முன் பின் யோசிக்காமல் தியானமும் செய்யாமல் மந்திரத்தின் பயனைச் சோதித்துப் பார்க்க எண்ணி அந்த மந்திரத்தை உச்சரித்தார்கள். அவ்வளவுதான்.

உடனே என்ன ஆனது தெரியுமா?

அந்த எலும்புகள் எல்லாம் ஓநாய்களாக மாறி அவர்களை துரத்த ஆரம்பித்தது.

சீடர்கள் எல்லாம் தலைதெறிக்க ஓட ஆரம்பித்துவிட்டார்கள் ஓநாய்களும் விடவில்லை. அவர்களைத் துரத்திப் பிடித்து கடித்துக் குதற ஆரம்பித்துவிட்டது

"அப்போதுதான் அந்த சீடர்களுக்கு குரு சொன்ன அறிவுரையின் அர்த்தம் புரிந்தது.

"பக்குவப்படாத அறிவு ஆபத்தானது"

அதனாலே இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்

நாம் நம் அறிவை வளர்த்துக்கொண்டால் மட்டும் போதாது அந்த அறிவை எப்போது எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற பக்குவமும் நமக்கு வர வேண்டும்.

அப்போது தான் வாழ்க்கை நல்லபடியாக அமையும். இல்லை என்றால் இடைஞ்சல்தான். இந்தக் காலத்திலே சில சின்ன பிள்ளைகளுக்கே அறிவு ரொம்பப் பக்குவப்பட்டிருப்பதை உணரமுடிகிறது.

ஒரு சின்னப் பையன். பள்ளிக்கூடத்திலே "மார்க்லிஸ்ட்" கொடுத்தார்கள். வாங்கிக் கொண்டு அவசரமாக வீட்டுக்கு ஓடினான். எதிரிலே வந்த ஒருவர் கேட்டார்.

என்ன அவசரம். ஏன் இப்படி வேகமாக ஓடுகிறாய்?" என்று. எங்கள் அம்மாவிடம் அடிவாங்க வேண்டும். அதற்காகத்தான் ஓடுகிறேன்!"என்றான்.

"அடி வாங்குவதற்காகவா இவ்வளவு அவசரம்?" என்றார் அவர்.

"அப்படி இல்லை. நான் போவதற்குள்ளே எங்கள் அப்பா வீட்டுக்கு வந்துவிட்டார் என்றால் அவரிடம் அடி வாங்க வேண்டியிருக்கும். அதை "அவாய்ட்" செய்வதற்காகத்தான் இப்படி ஓடுகிறேன்!" என்றான் அந்தப் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி-புழுதியாறு குள நீர்ப்பாசனத்திட்டம் மீண்டும் மேற்கொள்ள வேண்டும்

## பிரதேச மக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - புழுதியாறு குளத்தில் சுமார் மூன்று கோடியே இருபது இலட்சம் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட நிலையில் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்துள்ள ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறித்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாயவனூர் கிராமத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையிலும் வடக்கு மாகாண சபையால் கடந்த 2017ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்று நீர்ப்பாசன திட்டம் உரிய முறையில் முன்னெடுக்கப்படாத நிலையில் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நில்லையில் குறித்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் குறைபாடுகள் தொடர்பிலும் அதனை மீள நடைமுறைப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பின்தங்கிய தங்களின் கிராமத்தை பின்தங்கிய நிலையிலே வைத்திருப்பதற்கு சிலர் முயற்சி செய்து வருவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (8)

# மின் இணைப்பு இன்மையால் விவசாயிகள் பாதிப்பு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் மின்சாரம் இன்மையால் அப்பகுதியில் வசிக்கும் விவசாயக்குடும்பங்கள் பெருந்த இடர்பாடுகளுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் இரண்டாம் குறுக்குவீதி மற்றும் மூன்றாம் குறுக்குவீதிப் பகுதிகளில் 24 இற்கும் மேற்பட்ட விவசாயக்குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன், அப்பகுதியில் 200ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தில் விவசாயநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் இதுவரை அப்பகுதிக்கு மின் இணைப்பு பொருத்தப்படவில்லை.

குறிப்பாக இப்பகுதியில் இவ்வாறு மின்இணைப்பு பொருத்தப்படாமையினால் எரிபொருளின் பயன்பாட்டில் இயங்கும் நீர்இறைக்கும் இயந்திரங்களைக்கொண்டே விவசாயிகள் தமது பயிர்செய்கைகளுக்கு நீர்ப்பாசனம் செய்கின்றனர். இதனால் எரிபொருளுக்கு அதிகளவில் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அப்பகுதிக்கு மின்னிணைப்பினை வழங்கினால் எரிபொருளுக்கான பாரிய செலவீனம் குறைவடைவதுடன், மேலதிகமாகவும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்படுமென அப்பகுதி விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது. (8)




வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகமும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டுப்பெருவிழா அண்மையில் சிறப்பான முறையில் இடம் பெற்றது.
(படங்கள்:வசந்தரூபன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 | 170 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 200 | 120 | 200 |
| தக்காளி | 160 | 180 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 200 |
| கோவா | 250 | 260 | 300 | 250 | 300 |
| கரட் | 450 | 500 | 500 | 400 | 500 |
| பூசணி | 100 | 60 | 100 | 60 | 100 |
| புடோல் | 150 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-300 | 250 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 150 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 230 | 300 |
| லீக்ஸ் | 350 | 280 | 300 | 200 | 250 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 400 | 170 | 300 |
| போஞ்சி | 700 | 600 | 400 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | -- | 180 |
| கீரை – 1 பிடி | 100 | 60-120 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 450 | 1000 |
| வெங்காயப்பூ | 450 | 200 | 150 | 250 | 450 |
| முள்ளங்கி | 100 | 150 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 70 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 | 200 |

# இராசிபலன்

20.08.2025
ஆவணி 04, புதன்கிழமை
துவாதசி பிற்பகல் 3.05 மணிவரை

புநர்பூசம் பின்னிரவு 2.11 மணிவரை
சுப நேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

பிரதோஷ விரதம்
சந்திராஷ்டமம்: கேட்டை

**வளவன்**

**மேஷம்**: ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கடகம்**: பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திகைப்படையலாம், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற பிரார்த்திப்பீர்கள்.

**துலாம்**: விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மகரம்**: உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**ரிஷபம்**: தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் ஆதாயம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**விருச்சிகம்**: தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**கும்பம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**: எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி**: நிலையான வருமானத்திற்கு வழி பிறக்கும், திறமைகள் வெளிப்படும் நாள்; எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு**: பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மீனம்**: உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

மரணம் எனும் அழைப்பு வரும் வரை உழைப்பு அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

# பிரதம செயலாளர் செயலகம் - வட மாகாணம்.

# பாவனையிலிருந்த வாகனங்களின் விற்பனை

1) பிரதம செயலாளர் – வடக்கு மாகாணம் அவர்களால் வட மாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களின் பாவனையிலிருந்த பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | கேள்வி இல | வாகன இல | உற்பத்தி / வகை | கேள்விப் பிணைப் பணம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை (ரூபா) | காலாவதி திகதி |
| | நான்கு சில்லு வாகனங்கள் | | | | |
| 01 | DV/2025/1 | NP KH 3768 | LAND ROVER – FREELANDER | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 02 | DV/2025/2 | NP KE 1826 | Nissan - X. TRAIL JEEP | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 03 | DV/2025/3 | NP KH 4184 | Land Rover - FREELANDER | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 04 | DV/2025/4 | NP KD 4840 | Maruti –GYPSY | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 05 | DV/2025/5 | NP LW 0441 | Nissan – URVAN- Ambulance | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 06 | DV/2025/6 | NP JY 0336 | Nissan - URVAN - Ambulance | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 07 | DV/2025/7 | NP ZA 2530 | FOTON- BOWOR3P71APA108L- Special Purpose Vehicle | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 08 | DV/2025/8 | NP ZA 1114 | MENTONG - LMT5081GLQ -Special Purpose Vehicle | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 09 | DV/2025/9 | NP GK 8457 | Mitsubishi - L200 (Double Cab) | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 10 | DV/2025/10 | 250 - 5019 | Mitsubishi - L200 | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 11 | DV/2025/11 | 53 - 6247 | Mitsubishi - L200 | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 12 | DV/2025/12 | 53 - 4542 | Toyota – HILUX | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 13 | DV/2025/13 | 58 - 3147 | Mitsubishi –Dual Purpose Vehicle | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 14 | DV/2025/14 | NP GW 7078 | MAHINDRA- 475 - D1 - Tractor | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |
| 15 | DV/2025/15 | 37 SRI 4901 | FORD - Tractor | கேள்வித் தொகையின் 10 % | 07.01.2026 |

| | தொ.இல | வாகன இல | உற்பத்தி / வகை | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| | மோட்டார் சைக்கிள் | | | |
| 16 | DV/2025/16 | NP GG 4264 | Honda - Marvel | 6,000.00 |
| 17 | DV/2025/17 | NP JE 6934 | TVS - Mero FZ | 6,000.00 |
| 18 | DV/2025/18 | NP HE 8648 | Hero Honda - DAWN | 6,000.00 |
| 19 | DV/2025/19 | NPWN 4539 | TVS – Star | 6,000.00 |
| 20 | DV/2025/20 | 152-0864 | HONDA - CH 25 (Japanese) | 6,000.00 |
| 21 | DV/2025/21 | NP HE 8645 | Hero Honda- DAWN | 6,000.00 |
| 22 | DV/2025/22 | NP JR 4921 | Hero Honda - CD100 SS | 6,000.00 |
| 23 | DV/2025/23 | NP HH 1031 | Hero Honda - DAWN | 6,000.00 |
| 24 | DV/2025/24 | NP WD 6391 | Bajaj - Platina BM 125 | 6,000.00 |
| 25 | DV/2025/25 | NP HW 1285 | Hero Honda- CD100 SS | 6,000.00 |
| 26 | DV/2025/26 | NP GZ 5604 | Hero Honda - CD 100 SS | 6,000.00 |
| 27 | DV/2025/27 | NP HW 1288 | Hero Honda - CD 100 SS | 6,000.00 |
| 28 | DV/2025/28 | NP MK 2040 | Bajaj - Discover DTS1 | 6,000.00 |
| 29 | DV/2025/29 | NP VY 2247 | Bajaj - Platina BM 125 | 6,000.00 |
| 30 | DV/2025/30 | NP UR 5210 | Bajaj - Boxer-s | 6,000.00 |
| 31 | DV/2025/31 | 154 - 8860 | Hero Honda - CD 100 SS | 6,000.00 |
| 32 | DV/2025/32 | NP VH 5336 | Bajaj - PLATINA | 6,000.00 |
| 33 | DV/2025/33 | NP TJ 6657 | TVS - Scooty pep+ | 6,000.00 |
| 34 | DV/2025/34 | NP WI 1695 | Bajaj - Platina BM 125 | 6,000.00 |
| 35 | DV/2025/35 | NP WQ 4826 | Bajaj CT 100 | 6,000.00 |
| 36 | DV/2025/36 | NP BAA 6267 | Bajaj Pulsar - 150 CC | 6,000.00 |
| 37 | DV/2025/37 | NP MA 9602 | Bajaj - CT 100 | 6,000.00 |
| 38 | DV/2025/38 | NP MS 6692 | TVS - Star | 6,000.00 |
| 39 | DV/2025/39 | NP MI 7483 | Hero Honda - CD DAWN | 6,000.00 |
| 40 | DV/2025/40 | NP WH 9584 | Hero Honda- CD Dawn | 6,000.00 |
| 41 | DV/2025/41 | NP WD 6363 | Bajaj - Platina BM 125 | 6,000.00 |
| 42 | DV/2025/42 | NP HR 3144 | DELUXE- CO125 | 6,000.00 |
| 43 | DV/2025/43 | NP WC 3923 | TVS - SCOOTY PEP+ | 6,000.00 |
| 44 | DV/2025/44 | NP VY 2314 | Bajaj PLATINA BM 125 | 6,000.00 |
| 45 | DV/2025/45 | NP WD 6387 | Bajaj Platina BM 125 | 6,000.00 |
| 46 | DV/2025/46 | NPWN 4535 | TVS, -Star | 6,000.00 |
| 47 | DV/2025/47 | NP WI 1692 | BAJAJ - Platina BM 125 | 6,000.00 |
| 48 | DV/2025/48 | NP MS 6647 | TVS - Star | 6,000.00 |
| 49 | DV/2025/49 | NP WD 6347 | Bajaj - Platina BM 125 | 6,000.00 |
| 50 | DV/2025/50 | NP VF 2188 | Kinetec - KINE 100 | 6,000.00 |
| 51 | DV/2025/51 | NP MA 9798 | Kinetec - BOSSV2 | 6,000.00 |
| 52 | DV/2025/52 | NP VF 2189 | Kinetec - KINE 100 | 6,000.00 |
| 53 | DV/2025/53 | NP VF 2184 | Kinetec - KINE 100 | 6,000.00 |
| 54 | DV/2025/54 | NP BCE 1056 | Hero - PLEASURE | 6,000.00 |
| 55 | DV/2025/55 | NP MB 0352 | Kinetec - BOSSV2 | 6,000.00 |
| 56 | DV/2025/56 | NP VH 6213 | Bajaj - Platina | 6,000.00 |
| 57 | DV/2025/57 | NP HW 1295 | Hero Honda - CD100SS | 6,000.00 |
| 58 | DV/2025/58 | NP WC 3942 | TVS – STAR SPORT 125 | 6,000.00 |
| 59 | DV/2025/59 | NP HV 9806 | Hero Honda- CD100SS | 6,000.00 |
| 60 | DV/2025/60 | NP VF 2190 | Kinetec- KINE100 | 6,000.00 |
| 61 | DV/2025/61 | NP BCE 0938 | Hero- DAWN | 6,000.00 |
| 62 | DV/2025/62 | NP BCE 1085 | Hero - DAWN | 6,000.00 |
| | பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்கள் | | | |
| 63 | DV/2025/63 | EMEI - கை உழவு இயந்திரம் | | 6,000.00 |
| 64 | DV/2025/64 | WIMAL - உழவு இயந்திரப் பெட்டி | | 6,000.00 |
| 65 | DV/2025/65 | WIMAL - உழவு இயந்திரப் பெட்டி | | 6,000.00 |
| 66 | DV/2025/66 | TECHNIP - உழவு இயந்திரப் பெட்டி | | 6,000.00 |
| 67 | DV/2025/67 | ISUZU - Motor Lorry | | 6,000.00 |

2) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்வி ஆவணங்களையும் எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 500/= இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 21.08.2025 ஆம் திகதி தொடக்கம் 10.09.2025 ஆம் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரையான காலப்பகுதியில் பிரதிப் **பிரதம செயலாளர்- நிதி, பிரதிப் பிரதம செயலாளர்-நிதி அலுவலகம், வட மாகாணம், மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப் பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

3) கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை அலுவலக நாட்களில் 21.08.2025 ஆம் திகதி தொடக்கம் 10.09.2025 திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரை **நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் அமைந்துள்ள வடமாகாண சபையின் தற்காலிக வாகனத் தரிப்பிடத்திலும், DV/2025/67- ISUZU - Motor Lorry** பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனத்தினை **சுகாதாரத் திணைக்களம் வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம் பண்ணையில்** பார்வையிடலாம்.

4) ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட வாகனங்களிற்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5) கேள்விதாரர்கள் மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு பணத்தினை அட்டவணையிலுள்ள 01-15 வரையான நான்கு சில்லு வாகனங்களுக்காக கேள்விதாரரினது கேள்வித் தொகையில் 10 % கேள்விப்பிணை முறியாக (Bid Security Bond) கேள்வி ஆவணத்தில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணைமுறி மத்திய வங்கியினால் அங்கீக ரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வர்த்தக வங்கியிடமிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும் கேள்வி பிணை முறியினது காலாவதி திகதி 07.01.2026 ஆகும். மற்றும் அட்ட வணையில் உள்ள 16-67 வரையான மோட்டார் சைக் கிள்கள் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கேள்விப் பிணைப் பணத்தினை (Bid Security) வைப்பாக **பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, பிரதிப் பிரதம செயலாளர்-நிதி அலுவலகம், வட மாகாணம், மாகாண சபை வளாகம், A9 வீதி கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில்** பணமாக செலுத்துதல் வேண்டும்.

6) கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'கேள்விப் பத்திர மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விண் ணப்பம் - வாகன இல ........ "** எனக் குறிப்பிட்டு 11.09.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக் குழு, பிரதம செயலாளர் செயலகம், வடமாகாணம், மாகாணசபை வளாகம், A 9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதம செயலாளர் செயலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

7) கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தனுஜா முருகேசன்**
**தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு,**
**பிரதம செயலாளர் செயலகம்,**
**மாகாணசபை வளாகம்,**
**A 9 வீதி, கைதடி,யாழ்ப்பாணம்.**

(C-3677)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியைப் பரவச் செய்து, தன்னுடைய மற்றும் பிறரின் வாழ்வை மலரச் செய்யுங்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழா விழிப்போடு செயலாற்றுங்கள்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தப் பெருமானின் தேர்த் திருவிழா நாளை 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

நல்லூர்க் கந்தனின் தேர்த் திருவிழாவில் இலட்சக்கணக்கான அடியார்கள் கூடுவர் என்பது தெரிந்த விடயம்.

அதிலும் இம்முறை தேர்த்திருவிழாவுக்கு வருகின்ற அடியார்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆம், புலம்பெயர் நாடுகளில் இருந்து ஏராளமான நம் உறவுகள் நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்துள்ளனர்.

இதைவிட, நல்லூர்க் கந்தனின் திருவிழாவை மையப்படுத்தி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டுப் பிரஜைகளின் பிரசன்னமும் கணிசமாக இருக்கும் என்ற எதிர்வுகூறல் ஏற்புடையதாகும்.

இதைவிட, நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவில் பங்கேற்கும் பொருட்டு இந்தியாவில் இருந்தும் நிறையப் பேர் இங்கு வருகை தந்துள்ளனர்.

எனவே முன்னைய காலங்களைவிட இம்முறை நல்லூர் வேற்பெருமானின் தேர்த்திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பர் என்பதால், அங்கு ஏற்படக்கூடிய நெருக்கடியைச் சீர்செய்கின்ற பணியில் பொலி ஸார் மற்றும் தொண்டர்கள், சாரணர் அமைப்பு, சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகிய அமைப்பு கள் களத்தில் நின்று உச்சமாகக் கடமையாற்ற வேண்டும்.

அதிலும் சனநெருக்கடி ஏற்படக்கூடியது என ஏலவே இனங்காணப்பட்ட இடங்களில் பொலிஸாரின் பிரசன்னம் கட்டாயமானது.

அதேநேரம் அடியார்கள் நெருசலாக இருக்கக்கூடிய இடங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால், அங்கு கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்படுவதுடன் அடியார்கள் தங்க ஆபரணங்கள் அணிவதை முற்று முழுதாகத் தவிர்ப்பது பக்திபூர்வமான வழிபாட்டுக்கும் உதவுதாக இருக்கும்.

தவிர, நெருசலான கூட்டம் ஏற்படக்கூடிய ஏதுக்கள், இளைஞர்கள் வரிசை கட்டி தொடராகச் செல்வது, அடியார்கள் சென்று வருகின்ற வீதிகளில் கூட்டம் கூட்டமாக நின்று கதைப்பது என்பன முற்று முழுதாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

இதற்கும் மேலாக, அங்கப் பிரதட்சணம் செய்கின்ற அடியார்களை வழிப்படுத்தி அவர்களுக்கு உதவுகின்ற பணியிலும் தொண்டர்கள் ஈடுபடுவதுடன்,

யாரேனும் மயக்கமுறுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படும் பட்சத்தில், அவர்களுக்கு உடனடி முதலுதவி சிகிச்சை வழங்குவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதுடன் அது பற்றிய தகவல்களை அடியார்களுக்குத் தெரியப்படுத்துவதும் அவசியமாகும்.

ஒட்டுமொத்தத்தில் எங்கள் தமிழினத்தின் அடையாளமாக இருக்கும் நலைக் கந்தனின் தேர்த்திருவிழா சிறப்புற அமைய, அடியார்கள் அனைவரும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பாகும்.

### சமதர்ம ஆட்சி என்பதாலேயே

## ஐயப்பசுவாமி யாத்திரை புனித யாத்திரையாகியது

### அமைச்சர் சந்திரசேகர் விளக்கம்

இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். சமூகச் சீர்கேட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

எனவே இதனைச் சீர் செய்ய சமூக மாற்றத்துக்கு ஆன்மீக வாதிகளின் பங்களிப்பு மிக அவசியம் எனக் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஐயப்ப சுவாமிகளின் யாத்திரையினை புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்தியதன் பின்னர் அது தொடர்பான விசேட கலந்துரையாடல் கொழும்பு செட்டியார் தெரு கல்யாண முருகன் மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆட்சி கவிழும் என வங்குரோத்து அரசியல்வாதிகள் பிரசாரம் வருகின்றனர்.

இந்தப் போலி பரப்புரைக்கு வடக்கில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் வாதிகளும் உயிர்கொடுக்க முற்படுகின்றனர்.

ஐயப்பன் யாத்திரை கடந்த காலங்களில் புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை.

இதற்குரிய முயற்சி முன்னெடுக்கப்பட்டும் ஏன் அத்தனை வருடங்கள் நடக்கவில்லை? இனவாத ஆட்சியாளர்கள், இனவாத அமைச்சரவை இருந்ததால் தான் அது நடக்கவில்லை.

ஆனால் எமது சமதர்ம ஆட்சியில் இனவாதம் இல்லை. மக்கள் நலனுக்கே முக்கியத்துவம், முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அந்த வகையில் புனித யாத்திரை தொடர்பான அமைச்சரவை பத்திரம் வந்தபோது அதற்கு ஏகமனதாக ஆதரவளிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வறுமை ஒழிப்புக்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மறுபுறத்தில் வரி வருமானம் அதிகரித்துள்ளது. பொருளாதார இலக்குகளை அடைந்து வருகின்றோம்.

இந்நிலையில் ஆட்சி மாற்றம் பற்றி வங்குரோத்து அரசியல் வாதிகள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இதற்கு உயிர் கொடுக்கும் வகையில் வடக்கில் தோல்வி கண்ட, மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் வாதிகள் செயற்படுகின்றனர் என்றார்.

(ந-7)

## பேலியகொடையில் நேற்று துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி

(பேலியகொடை)

பேலியகொடை, ஞானரத்ன மாவத்தைப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (19) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பேலியகொடை, ஞானரத்ன மாவத்தை பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த 45 வயதுடைய நபரொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

(ந-7)

## இலஞ்சம் கோரிய காதி நீதிமன்ற நீதிபதி கைது

இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியும் அதற்கு உடந்தையாகச் செயற்பட்ட அவரது மனைவியும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பகுதியில் இயங்கி வந்த கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் இடம்பெற்றது.

பெண்ணொருவர் தனது வழக்கு ஒன்றிற்காக குறித்த அலுவலகத்திற்குச் சென்று வந்த நிலையில் தன்னிடம் இலஞ்சமாக பணம் கேட்கப்படுவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுப் புலனாய்வு அதிகாரிகளிடம் கடந்த மாதம் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

குறித்த முறைப்பாட்டிற்கமைய நேற்று மாறுவேடத்தில் மருதமுனை பகுதியில் இயங்கி வந்த காதி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு அருகில் அதிகாரிகள் காத்திருந்துள்ளனர்.

இதன்போது முறைப்பாட்டினை வழங்கிய அப்பெண் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியிடம் சென்று குறித்த இலஞ்சப் பணத்தை தருவதாக கூறி பணத்தை நீதிபதியின் மனைவியிடம் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிபதி மற்றும் அவரது மனைவியைக் கைது செய்ததுடன் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்களைப் பாரப்படுத்தினர். (ந-7)

## தீக்காயங்களுக்குள்ளான குடும்பப்பெண் உயிரிழப்பு

வவுனிக்குளம் செல்வபுரம் பகுதியில் குப்பைக்கு தீ வைத்த நிலையில் குப்பைமீது மயங்கி விழுந்த குடும்பப் பெண் ஒருவர் தீக்காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி சீத்தாதேவி (வயது- 65) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாராவார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி வீட்டில் குப்பைக்கு தீ வைத்த போது மேற்படி குடும்பப் பெண் குப்பை மீது மயங்கி விழுந்து தீக்காயம் அடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை(19) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டதோடு நட்டாங்கண்டல் பொலிஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.(ந-7,60)

## முன்னாள் அமைச்சர் ராஜிதவின் மனுக் கோரிக்கை நிராகரிப்பு

தனக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை தற்காலிகமாக இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் தாக்கல்செய்யப்பட்ட மனுவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் தன்னைக் கைதுசெய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை தற்காலிகமாக இரத்துச்செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நீதிமன்றில் நேற்று முன்தினம் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு கொழும்பு நீதவான் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (19) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுவைப் பரிசீலணை செய்த மன்று ராஜிதவின் கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 42

**சொக்கன்**

மேடலின் ஸ்டேஷன் நானும் அந்தப் பக்கமாகத்தான் போகிறேன் என்னுடன் வாங்களேன் உங்களை ட்ராப் பண்ணிவிடுகிறேன்.

ஓகே தாங்க்ஸ். கதவைத் திறந்துகொண்டு காரில் உட்கார்ந்தார் ஹலீம்.

ஐயாம்ஜாக்டொனோவன் சொந்தமாக பிஸினஸ் செய்கிறேன் என்றான். காரை ஓட்டியவன் நீங்கள்?

என் பெயர் ஹலீம். ஸ்டூடன்ட்.

அதன்பிறகு ஹலீமும் டொனோவனும் அடிக்கடி சந்தித்தார்கள். ஹலீமின் பலவீனங்கள் என்னென்ன என்று டொனோவனுக்குப் புரிய ஆரம்பித்தது. அவர் கேட்பதையெல்லாம் ஏற்பாடு செய்து கொடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாக ஹலீமுடைய நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொண்டான்.


ஆனால் அப்போது ஹலீமுக்குத் தெரியாத விடயம் டொனோவன் ஒரு மொசாட் ஏஜென்ட். பல கேஸ் சைன்டிஸ்டான ஹலீமின் லீலைகளையெல்லாம் அவன் ரகசியமாக வீடியோ படம் எடுத்துக் கொண்டிருந்தான்.

ஹலீமுக்குத் தன்னைச் சுற்றி ஒரு வலை விரிக்கப்பட்டிருப்பது இன்னும் புரியவில்லை. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட மொசாட், கொஞ்சம் கொஞ்சமாக அவரை நெருக்க ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் தன்னுடைய சிநேகிதர்கள் இருவரை ஹலீமுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் டொனோவன் இவர்கள் அணு சக்தி சம்பந்தமாக ஏதோ பிஸினஸ் செய்கிறார்கள்.

ஓ வெரி குட் என்றார் ஹலீம். நானும் அந்த ஆராய்ச்சியிலதான் இருக்கிறேன்.

நீங்கள் ஸ்டுடன்ட் என்று சொன்னீர்களே என்றான்.



ஹலீம் முகத்தில் அசடு வழிந்தது. இது ரொம்ப ரகசியமான ஆராய்ச்சி அதனால எங்களைப் பற்றிய விபரங்களை வெளியே யாரிடமும் யும் சொல்லக்கூடாது என்று உத்தரவு.

டொனோவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். அது எங்களுக்கு ஏற்கெனவே தெரியும்டா மவனே என்றார்!

இப்போது டொனோவனின் நண்பர்கள் ஹலீமைத் தூண்டிவிட்டார்கள். நாங்களும் உங்களை மாதிரியே அணு உலைகள் தயாரிச்சு விற்கிற முயற்சியில இருக்கிறோம் நீங்கள் எங்களுக்கு உதவி செய்ய முடியுமா?

உதவி என்றால் நான் என்ன செய்ய வேண்டும். எங்களுக்கு உங்க அணு உலையைப்பற்றி சில தகவல்கள் தேவைப்படுகிறது. அதை யெல்லாம் திரட்டிக் கொடுத்தீங்கள் என்றால் நல்ல பணம் தருகின்றோம்.

அது தப்பில்லையா?

மிஸ்டர் ஹலீம் நாங்கள் உங்கள் அணு உலையைத் திருடப் போறதில்லை. நீங்கள் கொடுக்கிற தகவல்களை வைத்து அதே மாதிரி இன்னொரு அணு உலை உருவாக்கி வேற ஆட்களுக்கு விற்கப்போகிறோம். அவளவு தான் இதுல நீங்க தயங்கறதுக்கு என்ன இருக்கு?

அவர்கள் சிரித்துக் கொண்டே பேசினாலும் ஹலீமுக்குப் பயத்தில் உடம்பெல்லாம் வெலவெலத்தது. இந்தப் பயலுங்க கேக்கறது பரம ரகசியமான மேட்டராச்சே இதையெல்லாம் வெளியே கொண்டு வாரது ரொம்ப ரிஸ்க். ஒரு வேளை மாட்டினால் அவ்வளவு தான். ஈராக்கில சதாம் உசேனுடைய சிஷ்யப் பிள்ளைகள் என்னைச் சும்மா விடமாட்டார்கள். உயிரோடு தோலை உரிச்சு உப்பு மிளகாய் போட்டு விடு வார்கள்.

ஆனால் பாவிப் பசங்க ஏதோ பணம் கொடுக்கறதாகச் சொல்றானுங்களே எவ்ளோ தருவாங்க?

இப்படி யோசிக்க ஆரம்பித்த பிறகு ஹலீமின் மனம் ஒரு நிலையில் இல்லை. இன்னும் எத்தனை நாளைக்குதான் நானும் விஞ்ஞானியாகக் குப்பை கொட்ட முடியும்? இவ்வளவு வருடம் ஈராக்குக்காக உழைச்சு என்னத்தைக் கண்டேன்? இப்போ இவர்கள் கேட்கிற விபரத்தைக் கொடுத்துவிட்டால் கைமேல காசு. அப்படியே எஸ்கேப்பாகி எங்கேயாவது ஒரு அஜால் குஜால் தீவில நிம்மதியா செட்டிலாகி விட வேண்டியதுதான்!

ஹலீமின் பேராசை நெருப்புக்கு மொசாட் எண்ணெய் ஊற்றி வளர்த்தது. சின்ன சின்ன தகவல்களுக்கெல்லாம் கூட அவருக்கு நிறைய பணம் அள்ளிக் கொடுத்தார்கள். இன்னும் பெரிய விடயமாக் கொண்டு வா நீ கற்பனையில் கூட நினைக்காத அளவு காசு தருகிறோம். என்று ஆசை காட்டி னார்கள்.

கொஞ்சம் கொஞ்சம் பாரிஸில் உருவாக்கிக் கொண்டிருக்கும் ஈராக் அணு உலையைப் பற்றிச் சகல விவரங்களையும் திரட்டிவிட்டது மொசாட் இந்த வரைபடத்தை வைத்துக்கொண்டு அந்த அணு உலையை எப்படி அழிக்கலாம் என்று கச்சிதமாகத் திட்டம் தயாரித்தார்கள்.

1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி மொசாட் அனுப்பிய ட்ரக் ஒன்று அந்த அணு ஆராய்ச்சி நிலையத்துக்குள்நுழைந்தது. அதில் ஐந்து அதிரடி வீரர்கள் மறைந்திருந்தார்கள்.

ஃபிரெஞ்சுப் பாதுகாவலர்களின் கண்ணில் மண்ணைத் தூவி உள்ளே புகுந்த இந்த வீரர்கள் சரியான நேரம் பார்த்து ரகசியமாகக் கீழே குதித்தார்கள். அணு உலையின் வெவ்வேறு பகுதிகளில் வெடிகுண்டுகளைப் பொருத்திவிட்டு வந்த சுவடு தெரியாமல் வெளியேறினார்கள்.

சில நிமிடங்களில் அந்தக் குண்டுகள் ரிமோட் கன்ட்ரோல் மூலம் வெடிக்கப்பட்டன. ஈராக்கின் அணு உலை பாதிக்குமேல் சேதமாகிவிட்டது. கிட்டத்தட்ட 23 மில்லியன் டொலர்கள் நஷ்டம்.

ஃபிரான்ஸ் காவல்துறை திகைத்துப் போனது. கச்சிதமாக எங்கே வெடி வைத்தால் அணு உலையில் அதிகபட்சச் சேதம் உருவாக்கமுடியும் என்று கணக்குப் போட்டு வேலை செய்திருக்கிறார்களே. யார் இந்த மலைமுழுங்கிகள் என்று புரியாமல் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டார்கள்.

சதாம் உசேன் நொந்து போனார். அவருடைய அணு ஆயுதக் கனவில் மண் விழுந்து விட்டது.

ஆனால் இப்போதும் சதாம் சோர்ந்து விடவில்லை. இடிபாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு மீண்டும் ஓர் அணு உலையை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கினார்.

மொசாட்டினர் சும்மா இருப்பார்களா? நீ கட்டுவியாம் நான் இடிப்பேனாம் என்று அடுத்த அதிரடித் திட்டத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டார்கள்!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழலை...

அரசாங்கம், நிதி மோசடி தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவரை நாட்டின் பிரதான அமைச்சரவை அமைச்சராக நியமித்திருப்பது பாரிய குற்றமாகும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

கேள்வி கோரல் செயற்பாட்டில் நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளமை தொடர்பில் மின்சக்தி வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக பாரிய குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகத் தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றது. அமைச்சர் குமார ஜயகொடி உரக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிகின்ற காலத்தில் அவருக்கு எதிராக 80 இலட்சம் ரூபாய் நிதி மோசடி தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. அந்த விசாரணையில் அவரைக் குற்றவாளியாக்கியதுடன் அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கும் அப்போதைய பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது இதுதொடர்பில் பேசப்படுகின்ற நிலையில், அமைச்சர் குமார ஜயகொடி தொடர்பில் அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என்பது தொடர்பில் நாங்கள் அவதானித்து வருகிறோம். நிதி மோசடி தொடர்பில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில், தான் குற்றவாளியாக்கப்பட்டதை அண்மையில் இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின்போது அவர் ஏற்றுக் கொண்டிருந்ததை நாங்கள் கண்டோம்.

அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதாக தெரிவித்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஊழல் மோசடி தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்ட அல்லது அவ்வாறான குற்றச்சாட்டுள்ள யாருக்கும் ஆட்சியில் பதவி வழங்கப்படமாட்டாது என்றே தேர்தலுக்கு முன்னர் இவர்கள் தெரிவித்தார்கள். அவ்வாறு தெரிவித்த அரசாங்கம் ஒன்று, நிதி மோசடி தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவரை நாட்டின் பிரதான அமைச்சரவை அமைச்சராக நியமித்திருப்பது தொடர்பில் கேள்வி எழுகிறது.

அதேபோன்று இந்த அரசாங்கம் வித்தியாசமான அரசியல் போக்கை கடைப்பிடித்து வருகிறது. அதுதான் அரசாங்கம் செயற்படுத்தும் கொள்கைகள், எடுக்கப்படும் அரசியல் தீர்மானங்கள் எதனையும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தாமல் இருப்பதாகும். அதன் முறையிலேயே அரசாங்கம் இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களைப் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிக்காமல் இருக்கிறது என்றார். (ந-7)

## கொடிகாமத்தில்...

துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நீர்க்குழாய்களை புதைப்பதற்காக நிலத்தினை அகழ்ந்தபோது சந்தேகத்திற்கு இடமான முறையில் உரப்பை ஒன்று காணப்பட்டதை அடுத்து, கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த உரைப் பையை மீட்டு சோதனையிட்ட போது அதற்குள் வெடிக்காத நிலையில் துப்பாக்கி ரவைக் கோர்வைகள் காணப்பட்டுள்ளன.

அதனையடுத்து அவற்றை கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்ற பொலிஸார் பரிசோதித்ததில் மொத்தமாக அவற்றுள் 1393 துப்பாக்கி ரவைகள் குறித்த பையில் காணப்பட்டுள்ளது.

அவற்றினை நீதிமன்றில் பாரப்படுத்தி நீதிமன்ற உத்தரவில் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## நீதிமன்றக்...

என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (19) நடைபெற்ற பணச் சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

வரிகளை வரையறையற்ற வகையில் அதிகரித்து அரச வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரச சேவை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவையும் அரசியலாக்கப்பட்டு அரசியல் நியமனங்கள் வழக்கப்பட்டுள்ளன.

ஆளும் தரப்பில் முன்னிலையில் இருப்பவர்களின் வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். நாட்டு மக்கள் வெகு விரைவில் பல விடயங்களைத் தெரிந்து கொள்வார்கள். நீதிமன்றக் கட்டமைப்பை அரசியல் மயப்படுத்தினால் வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்கு வராது.

எதிர்க்கட்சியில் இருந்த போது மக்கள் பக்கம் இருப்பதாக குறிப்பிட்டீர்கள். தற்போது அதிகாரத்தில் உள்ளீர்கள். ஆகவே மக்களின் தரப்பில் இருந்து செயற்படுங்கள். மத்திய வங்கியின் கையிருப்பு றில்லியன் கணக்கில் உயர்வடைந்துள்ளதாக ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். அவ்வாறாயின் ஏன் நெல்லை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யாமல் இருக்கிறீர்கள்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் எதிர்க்கட்சிகள் மீது பழிசுமத்துவதைப் பிரதான கொள்கையாக அரசாங்கம் கொண்டுள்ளது. விமர்சனங்களைத் தவிர்த்து விட்டு மக்களுக்காகச் செயற்படுங்கள் என்றார். (ந-7)

## இன்று சப்பறம்...

இன்று மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டபப்பூஜையைத் தொடர்ந்து வேற்பெருமான் கஜவல்லி மகாவல்லி சமேதராய் சப்பறத்தில் ஆரோகணித்துப் பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

நாளை இரதோற்சவப் பெருவிழா வானது காலை 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது இலட்சக்கான அடியார்கள் புடைசூட சண்முகப் பெருமான் வள்ளி தேவசேனா சமேதராய் சித்திரத் தேரில் எழுந்தருளி அருள்பாலிக்கவுள்ளார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 5926 — K 7 2 6 0 5 0
அத சம்பத — K 6 0 5 0 — சீட்டிழுப்பு இலக்கம் 0501
சுப தவசக் — திகதி 2025.08.19 — 0842 — ரிஷபம் 14 15 39 53
தன நிதானய — திகதி 2025.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 1956 — R 15 42 48 50 R — Double Chance 36851
மெகா பவர் — திகதி 19/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2274 — E 23 22 48 69 78
ஜய ஜய — திகதி 2025.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0194 — G 5 7 6 8
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4168 — சீட்டிழுப்பு திகதி 19.08.2025 — N 08 30 54 56 — N
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 1235 — மீனம் 01 12 53 54 மீனம் — 27696
உத்தியோகபூர்வ முடிவுகள் — 19.08.2025 — வெற்றி வாரம் 0634 — N 0 1 8 8 2 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,340,373.20
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2900 — சீட்டிழுப்பு திகதி 2025.08.19 — தினம் செவ்வாய்க்கிழமை — 23 30 43 77 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,130,092.00
சனிதா — திகதி 19.08.2025 — வெற்றி வாரம் 5061 — 17 40 44 51 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,940,453.20
சசிரி — வெற்றி வாரம் 0751 — 19.08.2025 — செவ்வாய்க்கிழமை — 20 35 42 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4612 — சீட்டிழுப்பு திகதி 19.08.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 21 39 48 61 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,329,771.60
கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — R 22 09 13 18 54 — 2076 — 19.08.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.588,791,264.60
அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2726 — 2025.08.19 — 25 26 28 30 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,648,795.20
DLB / NLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொத்துவில்...

பெற்ற ஊடக சந்திப்பின்போது, கடந்த காலங்களில் சுமந்திரன் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் உள்ளதாக கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பலருக்கு ஞாபக மறதிகள் இருக்கலாம் அல்லது தமது அரசியலுக்காக ஞாபகம் இருந்தும் மறந்துபோனது போல குற்றச்சாட்டுக்களை கூறலாம். நாம் கடந்த காலங்களிலும் பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடாத்தி இருந்தோம். வலி. வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டங்களை முன்னெடுத்தோம்.

காணி சுவீகரிப்புக்கு எதிராக சட்டப் போராட்டங்களையும் முன்னெடுத்தோம். தற்போதும் அந்த வழக்குகள் விசாரணையில் உள்ளன.

பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்கக் கோரி கொழும்பில் இருந்து அம்பாந்தோட்டையில் உள்ள மஹிந்த ராஜபக் ஷவின் சொந்த ஊரான தங்காலை வரையில் பேரணியாகச் சென்றோம். பேரணிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட வாகனத்தை காலி முகத்திடலில் வைத்து பொலிஸார் கடத்திச் சென்றனர்.

அதனைப் போராடி மீட்டு எமது பேரணியை முன்னெடுத்தோம். குறிப்பாக P2P என அழைக்கப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தை முன்னின்று பொலிகண்டி வரையில் கொண்டுவந்து சேர்த்ததும் நாமே. அன்றைக்கு சுமந்திரனும் சாணக்கியனும் இல்லை என்றால் போராட்டம் பொத்துவிலுடன் முடிக்கப்பட்டு இருக்கும் என அன்றே பலர் ஊடக சந்திப்புக்களில் கூறியிருந்தார்கள்.

நாங்கள்தான் பொலிஸ் தடைகளை உடைத்துப் பொலிகண்டி வரை பேரணி பேரெழுச்சியாக சென்றடைய முன்நின்றோம். அதற்காகப் பொலிஸ் விசாரணைகளை கூட எதிர்கொண்டோம். என்றார். (ந-7)

## மாப்பிள்ளை தேவை

01. சாவகச்சேரி, இந்து, 1995, கேட்டை, Justice Diploma in arts Phycologist, கனடா Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 44161
02. பருத்தித்துறை - அல்வாய், இந்து, 1996, அவிட்டம், MSc, Norway பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53101
03. பருத்தித்துறை, இந்து, 1994, விசாகம், High School Diploma, Canada Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 54171
04. சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Software Engineer, Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54241
05. அல்வாய் - உடுப்பிட்டி, இந்து, 1993, ரேவதி, Bachelor of Engineering (Auckland), Electrical Engineer, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53766
06. மாதகல், இந்து, 1992, ரோகிணி, Civil Engineer, PHD (USA), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 46435
07. வேலணை, இந்து, 1992, பூரம், ACCA Complete, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 33548
08. திருநெல்வேலி, இந்து, 1997, கார்த்திகை, PHD (Medical - UK) UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09. Jaffna Town - இளவாலை, இந்து, 1991, கார்த்திகை, MBBS, FLAB 2, Doctor, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 37584
10. புங்குடுதீவு - நுணாவில், இந்து 1991, Personal Support Worker, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 42421

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (5096)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## காணி தேவை

திருநெல்வேலியில் 1 - 2 பரப்புக் காணி/ வீட்டுடன் காணி நல்ல சூழலில் தேவை. (5094)

074 091 0991

## உடன் விற்பனைக்கு

யாழ்.KKS வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில், KKS வீதி முகப்புடன் 150 அடி நீளமும் 150 அடி அகலமும் கொண்ட காணித்துண்டு விற்பனைக்குண்டு.

இதனை 15X150 ஆக பிரித்தும் விற்கப்படும். (C-3680)

தொடர்பு: 077 723 2535

## துசிதவுக்கு மறியல்

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவவை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை (19) உத்தரவிட்டுள்ளது.

அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றத்துக்காக அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான 478,000 ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய மடிக்கணனி, கையடக்க தொலைபேசி போன்ற பொருட்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3670)

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

UK - 1320/=
Australia - 2220/=
France - 2080/=
Canada - 2570/=
Germany - 1920/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி (5078)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## வேலைவாய்ப்புக்கள்

JERI IMPORTS & LOGISTICS PVT LTD, புதுமையான விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு உபகரணங்களையும் தொழில்நுட்பங்களையும் உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும். எங்களுடைய வளர்ச்சிக்கு பங்களிக்க ஆர்வமுள்ள, திறமையான மற்றும் அர்ப்பணிப்புடன் உழைக்கும் நபர்களை எங்கள் குழுவில் இணைத்துக்கொள்ள விரும்புகிறோம்.

**Accountants Assistant & Sales Assistant (Jaffna/Kilinochchi)**

- க.பொ.த உயர்தரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- MS Offfice /Excel அறிவு இருக்கவேண்டும்.
- குறித்த துறையில் முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது
- கணக்கியல் அறிவு கட்டாயம்.
- சம்பளம் (35,000-50,000) நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**Video Editor/Graphics Designer (Jaffna/Kilinochchi)**

- க. பொ. த சாதாரண தரம் அல்லது உயர்தரம் பூர்த்தி செய்திருத்தல்.
- குறித்த துறையில் முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
- புகைப்படம்/வீடியோ எடுப்பதில் மற்றும் எடிட்டிங் செய்வதில் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
- Adobe Premier/Photoshop/illustrator போன்றவற்றில் தேர்ச்சியும் விரும்பத்தக்கது.
- அடிப்படை ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத்தக்கது.
- சம்பளம் (35,000 - 60,000)நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**பண்ணைத் தொழிலாளர்கள் (திருநெல்வேலி)**

- பண்ணையின் அன்றாட வேலைகள் செய்யக்கூடியவராக இருத்தல்.
- சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல்.
- குறித்த நேரத்தில் வேலை செய்து முடிப்பவராகவும், சிறந்த நன்நடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- சம்பளம் (55,000 - 70,000) நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

உங்கள் சுயவிபரக் கோவையை jerifarmworld@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு (1470)

077 354 9140/ 077 229 0169

## மணப்பெண் தேவை

01. நல்லூர் - சுண்டிக்குளி, இந்து, 1996, ரேவதி, MBBS, Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 51633
02. இளவாலை, இந்து, 1991, கேட்டை, BSC, Civil Engineering மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 47511
03. அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 42381
04. மானிப்பாய், இந்து, 1989, விசாகம், Software Engineer மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 40520
05. பருத்தித்துறை, இந்து, 1995, சதயம்,Charted Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 39676
06. கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS, Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07. மீசாலை - சாவகச்சேரி, இந்து, 1994, மிருகசீரிடம், MBBS, Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 33190
08. தெல்லிப்பளை - புத்தூர், இந்து, 1979, அவிட்டம், CIMA,Charted Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32638
09. கோப்பாய், இந்து, 1982, சுவாதி, MBBS, Doctor, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 31058
10. தும்பளை, இந்து, 1992, பூசம், CIMA Qualified, Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 53204

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (5096)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## உடனடி விற்பனைக்கு

அலுவலகப் பாவனையில் இருந்த Printer, Laptop, Photocopier, A/C மற்றும் Scanner உடனடி விற்பனைக்கு உண்டு (5095)

077 666 5628

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள் , எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3679)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## வேலைக்கு ஆட்கள் தேவை

வடமராட்சியில் உள்ள தொழிலகத்திற்கு Packing வேலைக்கு பெண்கள் தேவை. (அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) (1467)

075 939 7254

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 12 [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.